DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 25 /2019**

Deposition of Witness: DW2.

| | | | |
|---|---|---|---|
| Name | ஜெயராம் | Father Name – ராமநாதன் | |
| Age | 73 | Village – | போடிநாயக்கனூர் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.07.2026.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. வழக்குரை சொத்தை நான் எந்த தேதியில் கிரையம் வாங்கினேன் என்றால் 03.08.2011ம் தேதி கிரையம் வாங்கினேன். வழக்குரை சொத்தை கிரையம் வாங்கிய சமயத்தில் வாதியின் தந்தை ஆங்கத்தேவர் இறந்துவிட்டார் என்றும், அதனால் சொத்தை நான் வாங்கக்கூடாது என ஆங்கத்தேவரின் வாரிசுகள் எனக்கு அறிவிப்பு வழங்கியிருந்தார்களா என்றால் அறிவிப்பு எதுவும் வழங்கவில்லை. வழக்குரை சொத்தை 1ம் பிரதிவாதி 02.12.2000ம் தேதியில் வாதியின் தந்தையிடமிருந்து பொது அதிகாரம் பெற்றிருந்தார் என்றால் சரிதான். அந்த பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் தான் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 3 ஆவணம் தான் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு வாதியின் தந்தை ஆங்கத்தேவர் 20.12.2000ம் தேதியில் பதிவு செய்யப்படாத கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான்.

2. 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால் சாட்சியிடம் 20.12.2000ம் தேதிய பதிவு செய்யப்படாத வெண்ணிலை கிரைய ஆவணத்தை காண்பித்து கேள்வி கேட்க்கப்பட்டது, மேற்படி வெண்ணிலை கிரைய ஆவணம் பதிவு செய்யப்படாததால் அந்த பத்திரத்தை வைத்து கேள்வி கேட்க முடியாது என்று நீதிமன்றத்தால் ஆட்சேபிக்கப்பட்டு கேள்வி நிராகரிக்கப்பட்டது. வழக்குரை

சொத்தின் அசல் ஆவணங்கள் அனைத்தையும் 1ம் பிரதிவாதி என் வசம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்றது முதல் தற்போது வரை வழக்குரை சொத்தை நான் தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் வழக்குரை சொத்தை அனுபவித்து வருவதால் தான் செல்லத்துரை என்பவர் இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.58/2012 என்ற வழக்கை என் மீது பாதை பாத்தியம் கோரி தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் எதிர்வாதம் செய்து எனக்கு ஆதரவாக தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான்.

3. வழக்குரை சொத்தை கிரையம் வாங்கியபோது ஆங்கத்தேவரின் Life Certificate –யை சார்பதிவாளர் கேட்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கிரையம் எழுதிக் கொடுத்த சமயத்தில் ஆங்கத்தேவரை பற்றி அக்கம் பக்கத்தில் விசாரித்தார் என்றும், அப்போது ஆங்கத்தேவர் திருப்பூரில் வசித்து வருவதாக அக்கம் பக்கத்தினர் சொன்னார்கள் என்றும், அதன் அடிப்படையில் தான் எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என்னிடம் தகுந்த பிரதிபிரயோஜனத்தை பெற்றுக்கொண்டு தான் வழக்குரை சொத்தை கிரையம் முடித்து கொடுத்தார் என்றும், அதனால் நான் நல்லெண்ணக் கிரையக்காரர் என்றால் சரிதான்.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.07.08 17:09:04 +0530

District Munsif,
Bodinayakanur.